**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 88/2020 |
| Name | : பழனிச்சாமி |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 30.04.2024

**முதல் விசாரணை**

நான் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று சென்னிமலையில் வசித்து வருகிறேன். கடந்த 22.09.2017ம் தேதி எனது எல்லைக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டம் ஏ.ஆர்.ராம்நாத் ஸ்டோர் கடைக்கு சென்றேன் அங்கிருந்த கடையின் உரிமையாளர் ஏ,அஜ்மீர் அவரிடம் நான் உணவு பாதுகாப்பு அலுவலர் என அறிமுகப்படுத்திக் கொண்டு ஆய்வு செய்தபோது அந்த கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 250 கிராம் பொட்டலாமாக இருந்த டீ டஸ்ட் (வேலவன் சூப்பர் டீ ) பொட்டலமாக இருந்தது 136 பொட்டலங்களாக இருந்த. அதன் எடை 34 கிலோ. அதன் தரப்பில் சந்தேகம் ஏற்பட்டு அதனை உணவு மாதிரி எடுத்து

பரிசோதனைக்கு அனுப்ப கடை உரிமையாளரின் தெரிவித்தபோது அதற்கு அவரும் சம்மதித்து சாட்சி கதிரேசன் முன்னிலையில் பரிசோதனைக்காக படிவம் A–ல் சாட்சி கதிரேசனிடம் ஒப்பம் பெற்று அதை 1ம் எதிரிக்கு சார்வு செய்யப்பட்து. பின்னர் வேலவன் சூப்பர் டஸ்ட் டீ கொள்முதல் செய்தததற்கான பில் பற்றி கேட்ட போது அதற்கு பில் இல்லை என்று அவர் கூறினார். உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் கீழ் உரிமை பெற்றுள்ளீர்களா என்று கேட்ட போது பெறவில்லை என்றும், பெற்றுவிடுவதாக கூறினார். பின்னர் 34 கிலோ (250 கிராம் * 136 பொட்டலத்தில் இருந்த சுமார் 250 கிராம் வீதம் 4 பொட்டலங்கள் உணவு மாதிரி எடுப்பதற்காக அப்போதே விற்பனை விலையான ரூ.40/– வீதம் 4 பொட்டலங்களுக்கு ரூ.160/– செலத்தி ரசீது பெற்றுக்கொள்ளப்பட்டு. தலா மூன்று பாக்கெட்டுகள் வீதம் 4 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிகளிலும் தனித்தனியாக கெட்டியான பிரௌன் பேப்பர் ஒன்று நன்கு சுற்றி முனைகள் உட்புறமாக மடித்து பசை தடவி ஒட்டி உணவு மாதிரி கோடு எண்.24/027/299 மற்றும் வரிசை எண்.100/2017–2018 என குறிப்பிட்டு நான்கு லேபில்களை தயார் செய்து கையொப்பம் இட்டு அதனை ஒவ்வொரு உணவு மாதிரி பாக்கெட் வீதம் தனித்தனியாக ஒட்டி தடித்த பிரௌன் பேபர் ஒட்டி, பசை தடவி நியமன அலுவலரின் கையொப்பம் இட்ட கோடு எண் மற்றும் வரிசை எண். 24/027/299/48/2017–2018 கொண்ட பேப்பர் சிலிப் நான்கினை பசை தடவி ஒவ்வொரு உணவு மாதிரி பாக்கெட் வீதம் கீழிருந்து மேலாக ஒட்டப்பட்டது அதில் இரண்டிலும் கையெழுத்து வாங்கப்பட்டது. பின்னர் கெட்டியான நூல் கொண்டு ஒவ்வொரு உணவு பாகெட்டையும் மேலும் கீழும் குறுக்கும் நெடுக்கும் நன்கு சுற்றி, இருக கட்டி முடிச்சிட்டு முடிச்சின் மீது அரு அரக்கு முத்திரையும் உணவு பாக்கெட்டில் தலை பாகம், அடிப்பாகம் உடல் பாகத்தில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு அரக்கு முத்திரையும் ஆக மொத்தம் 5 அரக்கு முத்திரையும் புகார்தாரர் பதித்தார், மேற்படி உணவு மாதிரி எடுத்த விவரத்தை உரிமையாளரிடம் எழுதி ஒப்புதல் வாக்குமூலமாக வழங்கினார் . பின்னர் உணவு மாதிரி நான்காம் பாக்கெட்டை கடையின் உரிமையாளரிடம் சொந்த செலவில் உணவு மாதிரி மற்றும் தர நிர்ணய குழுவால் அங்கிகரிக்கப்பட்ட NABL ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்வதற்கு வாய்ப்புள்ளது என்பதனை புகார்தாரரிடம் விளக்கி கூறி அதற்கு அவர் 4ம் பகு உணவு மாதிரியை உணவு பரிசோதனை செய்ய விருப்பமில்லை என தெரிவித்து ஒப்புதல் கடிதம் பெற்றப்பட்டுள்ளது.

பின்னர் 6 பிரதிகளும் மாதிரி உணவு படிவம் 6 பிரதிகளும் தயார் செய்யப்பட்டு உணவு நியமன அலுவலருக்கு உணவு மாதிரி எடுத்தது பற்றியும் அனுப்புவது பற்றியும் தகவல் கொடுக்கப்பட்டு பின்னர் சீல் இட்ட உணவு மாதிரி பாக்கெட்டையும் படிவம் 6 மாதிரி முத்திரை படிவம் ஒ்ன்று கவரில் வைத்து பாதுகாப்பாக பெட்டியில் வைத்து அதை பார்சல் செய்து உணவு பகுப்பாய்வாளர் உணவு பகுப்பாய்வு கூடம் மதுரை அவர்களுக்கு 23.09.2017 ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. ரசீது எண்.ATC348707502 என தனியாக ஒரு கவரில் படிவம் 6 மாதிரி முத்திரை படிவம் ஒன்றையும் பசை தடவி அன்றே தபால் மூலம் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது ரசீது எண் Act ART5955983471 தனியாக ஒரு கவரில் படிவம் 6 மாதிரி முத்திரை படிவம் ஒன்றையும் பசை தடவி அன்றே தபால் மூலம் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது பின்னர் 3 சீல் வைத்த உணவு மாதிரி பாக்கெட்டுகள் மாதிரி முத்திரை படிவம் 3 ஒரு பெட்டியில் வைத்து உரிய முறையில் பார்சல் செய்து 23.09.2017 அன்று நியமன அலுவரிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்புதல் படிவம் பெறப்பட்டது. பின்னர் 22.09.2017 அன்று உணவு மாதிரி எடுக்கப்பட்ட ட டஸ்ட் வேலவன் சூப்பார் ட உணவு பொருள் மீதான உணவு பகுப்பாய்வாளரின் காலதாமத விளக்க கடிதம் முகப்பு கடித்ததுடன் கூடிய உணவு பகுப்பாய்வு அறிக்கை 0776/2017-2018 ஆகும். DIS No.2072/A4/2017 Dated 07.12.2017 ஆகும். 11.12.2017 ம் தேதி நியமன அலுவலுருக்கு பெறப்பட்டு மேல் நடவடிக்கைக்கு பெறப்பட்டது. நியமன அலுவலர் மேற்கண்ட அறிக்கையில் 2 ம் எதிரியான கடையின் உரிமையாளருக்கு உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 பிரிவு 46(4)ன தரவிதிகள் 2011 விதி 2.4.6(1)ன் படி பரிந்துரைக்கப்பட்ட பரிசோதனை கூடத்திற்கு அனுப்பவதற்காக கடிதத்துடன் 07.12.2017 ம் தேதி அன்று பதிவு தபாலில் அனுப்பப்பட்டது அதற்கான அஞ்சலக ரசீது பெறப்பட்டது. பின்னர் 1 ம் எதிரியான உணவு தயாரிப்பாளருக்கு பகுப்பாய்வு அறிக்கை சார்பு செய்யப்படாததால் சாட்சி 5 மூலம் நேரடியாக வழக்கப்பட்டு ஒப்பம் பெறப்பட்டுள்ளது. எதிரி சட்டத்தால் வழி செய்யப்பட்ட பரிந்துரை சோதனை அலுவலகம் உணவு மாதிரிக்கு அனுப்ப ஆய்வு செய்ய விருப்பம் செய்யவில்லை என்று தெரிவித்து ஒப்புதல் பெறப்பட்டு நியமன அலுவலரிடம் கொடுத்தார். எனவே பாதுகாப்பற்ற உணவு பொருளை தயாரித்த 1 ம் எதிரிமீதும் அதை விற்பனை செய்த 2 ம் எதிரி மீதும் உணவு தர நிர்ணய பாதுகாப்பு சட்டம் பிரிவு 26(1)(2) மீறி உணவு

பணியாளர் வணிகக்களுக்கான கடமையில் இருந்து தவறி உணவு பாதுகாப்பு தர நிர்ணய பாதுகாப்பு சட்டம் பிரிவு 52(1), 59(1), 63 விதிகள் 2023 கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு புதசாஆ.1 முதல் 18 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் 20.04.2012 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் நகல் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. 20.09.2011 தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் ஆணை அ.சா.ஆ.2, 22.09.2017 தேதியிட்ட படிவம் 5(ஏ) குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சார்வு செய்யப்பட்டதற்கான நகல் அ.சா.ஆ.3, 22.09.2017 தேதியிட்ட உணவு மாதிரிக்கான ரொக்க ரசீது அ.சா.அ.4, 22.09.2017 தேதியிட்ட குற்றம் சாட்டப்பட்டவரின் உணவு பொருள் உரிமையாளரின் வாக்குமூலம் அ.சா.ஆ.5, 22.09.2017 ம் தேதி NABL ஆய்வுக்கு அனுப்ப விருப்பமில்லை என் வழங்கிய கடிதம் அ.சா.ஆ.6, 22.09.2017 தேதிய படிவம் 6 அ.சா.ஆ.7, 22.09.2017 ம் தேதிய மாதிரி அரக்கு முத்திரை படிவம் அ.சா.ஆ.8, 22.09.2017 ம் தேதிய நியமன அலுவலர் திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.9, 23.09.2017 ம் தேதிய உணவு மாதிரியை உணவு பகுப்பாளர் மதுரை அவர்களுக்கு அனுப்பிய தபால் ரசீது அ.சா.ஆ.10, 23.09.2017 தேதியி படிவம் 6 மாதிரி முத்திரை பதித்த படிவம் உணவு பகுப்பாய்வுக்கு அனுப்பிய தபால் ரசீது அ.சா.அ.11, 23.09.2017 தேதிய நியமன அலுவலர் உணவு மாதிரியை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.12, 11.12.2017 ம் தேதிய உணவு பகுப்பாளர் அறிக்கை படிவம் (B) Report no.0776/2017–2018 அ.சா.ஆ.13, 12.12.2017 தேதிய உணவு பகுப்பாளர் அறிக்கை Form B அறிவிப்பு கடிதம் நியமன அலுவலர் திருப்பூர் அவர்களால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்டது. அதற்குரிய அஞ்சலக ரசீது பொற்றுக்கொண்டதற்கா ஒப்புகை அட்டை அ.சா.ஆ.14, 20.12.2017 ம் தேதிய குற்றம் சாட்டப்பட்ட ஏ.ஆர்.ரமலத் ஸ்டோர் உரிமையாளர் அரசால் பரிந்துரை செய்யப்பட்ட பரிசோதனைக் கூடத்திற்கு உணவு மாதிரியை அனுப்ப விருப்பமில்லை என வழங்கிய கடிதம் அ.சா.ஆ.15, 20.12.2017 ம் தேதிய குற்றம் சாட்டப்பட்ட ஏ.ஆர்.ரமலத் ஸ்டோர் உரிமையாளர் மற்றும் பிற விவரங்கள் பற்றி வழங்கிய கடிதம ஓட்டுநர் அட்டை நகல் அ.சா.ஆ.16, 04.09.2018 ம் தேதிய குற்ற வழக்கு தொடர உணவு பாதுகாப்பு ஆணையர்

சென்னை அவர்கள். Dis.No.3844/2018/S7/FSSA நாள் 04.09.2018 உத்திரவு வழங்கிய கடிதம் அ.சா.ஆ.17, புகாாதாரரின் அடையாள அட்டை அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.04.30 15:37:35 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்